செய்தி வெளியீடு நாள் : 31.12. 2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கிளாம்பாக்கத்தில் திறந்து வைக்கப்பட்ட "கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை"

மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் ஆய்வு.

இப்பேருந்து முனையத்திலிருந்து நெடுந்தூர தென் மாவட்ட முக்கிய நகரங்களுக்கு (SETC) 164 பேருந்துகளும், சென்னையில் உள்ள முக்கிய இடங்களுக்கு 2900 நடைகள் (MTC Bus Trips) இயக்கப்பட்டுள்ளது.

****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட கிளாம்பாக்கம், **கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை** இன்று (31.12.2023) மாண்புமிகு சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் மற்றும் தலைவரும் (ம) இந்து சமயம் அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் முனையத்திலுள்ள நேரக் காப்பாளர் அறை, கண்காணிப்பு அறை, பேருந்துகளின் நடைமேடைகள் மற்றும் கழிவறை ஆகியவற்றை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, இப்பேருந்து முனையத்திலிருந்து பேருந்துகள் இயக்கப்படுவது குறித்தும், பயணிகளுக்கான வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

இன்று (31.12.2023) இதுவரை இப்பேருந்து முனையத்திலிருந்து நெடுந்தூர தென் மாவட்ட முக்கிய நகரங்களுக்கு அரசு விரைவு போக்குவரத்து கழக பேருந்துகள் (SETC) **164 பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன.** அதேபோல இப்பேருந்து முனையத்திலிருந்து மாநகர போக்குவரத்து கழகம் மூலமாக சென்னையில் உள்ள முக்கிய இடங்களுக்கு **2900 நடைகள் (MTC Bus Trips) இயக்கப்பட்டுள்ளது.**

இந்த ஆய்வின் போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சூல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் திரு.சோ.ருத்ரமூர்த்தி, திரு.ந.ரவிக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மு.இந்துமதி, அரசு விரைவு போக்குவரத்து கழக மேலாண் இயக்குநர் திரு.கே.இளங்கோவன், பொது மேலாளர் திரு.வி.குணசேகரன், தலைமைப் பொறியாளர் திரு.சீனிவாச ராவ், செயற்பொறியாளர் திரு.ராஜன் பாபு மற்றும் காவல்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified by RealEstate